செ.வெ.எண்:53 நாள்:19.11.2021

**கிருஷ்ணகிரி மாவட்டம், கட்டிகானப்பள்ளி ஊராட்சி, பெரியார் நகர் பகுதிகளில் தண்ணீர் வெளியேற்றும் பணிகளையும், கேஆர்பி அணை மற்றும் ஊத்தங்கரை வட்டம், பாம்பாறு அணையில் இருந்து உபரி நீர் வெளியேறுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் இன்று(19.11.2021) பார்வயிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

**தென்பெண்ணை ஆற்றின் கரையோரம் வசிக்கும் பொதுமக்கள் ஆற்றை கடக்கவோ, கால்நடைகளை நீர்நிலை பகுதிகளுக்கு அழைத்து செல்ல கூடாது என்றும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை நீர்நிலைகளுக்கு செல்வதை அனுமதிக்க கூடாது என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள்.**

**தென்பெண்ணை ஆற்றில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளதால், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி ஆகிய 5 மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தென்பெண்ணை ஆற்றின் கரையோரம் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், கட்டிகானப்பள்ளி ஊராட்சி, பெரியார் நகர் பகுதிகளில் தண்ணீர் வெளியேற்றும் பணியையும், கேஆர்பி அணை மற்றும் ஊத்தங்கரை வட்டம், பாம்பாறு அணையில் இருந்து உபரி நீர் வெளியேறுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் இன்று(19.11.2021) பார்வயிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், கட்டிகானப்பள்ளி ஊராட்சி, பெரியார் நகர் பகுதிகளில் நேற்று பெய்த கனமழையால் சாலைகள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் தண்ணீர் தேங்கி இருக்கும் இடங்களில் இருந்து தண்ணீரை வெளியேற்றும் பணியை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மழை நீர் செல்லும் வழி தடம் மற்றும் கால்வாய்களில் பொதுமக்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடங்களை கண்டறிந்து ஜேசிபி இயந்திரம் மூலம் கால்வாய்கள் அமைத்து போக்குவரத்துக்கு இடையூறாக தேங்கி நிர்க்கும் தண்ணீரை வெளியேற்ற வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சி துறை, பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, கிருஷ்ணகிரி கே.ஆர்.பி அணை மற்றும் பாம்பாறு அணையில் இருந்து உபரி நீர் வெளியேறுவதை பார்வையிட்டு தென்பெண்ணை ஆற்றின் கரையோரம் வசிக்கும் மக்கள் தாழ்வான பகுதிகளில் இருந்து பாதுகாப்பான இடத்திற்கு செல்ல வேண்டும் எனவும், கெலவரப்பள்ளி அணையில் இருந்து 3,500 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. மேலும், கே.ஆர்.பி. அணையின் நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்யும் தொடர் மழையால் கே.ஆர்.பி.

அணைக்கு 16,600 கன அடி தண்ணீர் வருகிறது. கே.ஆர்.பி அணையில் இருந்து 19 ஆயிரம் கன அடி உபரி நீர் பிரதான மதகு மூலம் வெளியேற்றப்படுகிறது. பாம்பாறு அணையிலிருந்து 11 ஆயிரம் கண அடி தண்ணீர் என மொத்தம் 30 ஆயிரம் கன அடி தண்ணீர் தென்பெண்ணை ஆற்றில் வெளியேறிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் பொது மக்கள் யாரும் தென்பெண்ணை ஆற்றை கடக்க கூடாது என்றும், கால்நடைகளை நீர்நிலை பகுதிகளுக்கு அழைத்து செல்ல கூடாது என்றும், பெய்து வரும் கனமழை காரணமாக ஏரி, குளம், குட்டைகள் பெருமளவில் நீர் நிரம்பி உள்ள காரணத்தினால் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை நீர்நிலைகளுக்கும், ஆற்று பகுதிகளுக்கு குளிக்கவோ, வேடிக்ககை பார்க்க செல்வதை அனுமதிக்க கூடாது என்றும், இந்த தொடர் மழையால் 120 ஹக்டர் வேளாண் பயிர்கள் சேதமடைந்துள்ளது, 374 குடிசை வீடுகள் பதிக்கப்பட்டுள்ளது, மழையால் பாதிக்கப்பட்டு 4 நபர்கள் இறந்துள்ளனர்.

மாவட்டம் முழுவதும் மழையால் எந்த உயிர் சேதமும், பொருட்சேதம் ஏற்பட கூடாது என்றும், தாலூக்கா அளவில் வருவாய் துறை, ஊரக வளர்ச்சித்துறை, தீயணைப்பு துறை, பொதுப்பணித்துறை, காவல் துறை அலுவலர்கள் அடங்கிய குழு தொடர்ந்து கண்காணித்து வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளில் ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.எம்.தமிழ்செல்வன், வருவாய் கோட்டாட்சியர் திரு.சதீஷ்குமார், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.குமார், வட்டாட்சியர்கள் திரு.சரவணன், திருமதி தெய்வநாயகி, தனி வட்டாட்சியர் திரு.சம்பத், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி சாந்தி, திரு.மகேஷ்குமரன், திரு.சிவபிரகாசம், பாம்பாறு அணை உதவி பொறியாளர் திரு.கார்த்திகேயன், ஊத்தங்கரை ஒன்றிய குழு தலைவர் திருமதி.உஷாராணி குமரேசன், ஒன்றியக்குழு துணைத் தலைவர் திருமதி.சத்தியவாணி செல்வம், வருவாய்துறை, காவல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**